விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 மாசி 21 ஜ- ஆகி 11 இதழ் 22
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 4-3-1985

## சந்திரகாசன் மூன்று இயக்கங்களுக்குத் தலைமை!

### கைதான இளைஞர்கள் கூறியதாக தகவல்!!

(கொழும்பு)
தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசன் மூன்று தமிழ்த் தீவிரவாத இயக்கங்களுக்குத் தலைமை தாங்குகிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ, ஈரோஸ் ஆகியனவே இநத இயக்கங்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வடக்கில் கைதான தீவிரவாத இளைஞர்கள் கைது செய்யப்பட்ட போதே இந்த விபரம் தெரிவித்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இத்துடன் திரு. சந்திரகாசன் சென்னையில் உள்ள தமிழீழ தகவல் நிலையத்தின் தகவல் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றுகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் வெளியாகும் சிங்களப் பத்திரிகையொன்று இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி மேற்கண்ட தகவல்களை வெளியிட்டுள்ளது.

[இ-கி

## இனப்பிரச்னை

# இலங்கை இந்திய தொடர்பில் புல்ட்ஜென்ஸ் மத்தியஸ்தம்?

(பா. அனந்தகிருஷ்ணன்)

**இலங்கை இனப்பிரச்னையில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே புதிய மத்தியஸ்தராக இலங்கைப் பறங்கியர் இனத்தைச் சேர்ந்த பேராசிரியர் ரால்ப்வ்புல்ட்ஜென்ஸை இலங்கை அரசு பயன்படுத்தாலம் என ராஜதந்திர வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

பேராசிரியர் புல்ட் ஜென்ஸ் அண்மைக்காலமாக இலங்கை இனப்பிரச்னை குறித்த விடயங்களில் தீவிர அக்கறை செலுத்தி வருகின்றார் இவர் மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் நெருங்கிய நண்பரும், இந்தியாவின் 'நேரு விருது' பெற்ற உலகப் பிரமுகர்களில் ஒருவருமாக விளங்குகின்றார்.

இத்துடன் இவர் இலங்கை அரசாங்கத்தரப்பினரின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவராகவும் காணப்படுகின்றார்.

இவரின் அண்மைக்கால கருத்துக்கள் இந்தியாவின் நிலையை ஏற்றுக் கொள்ளுவதாகக் காணப்படுவதுடன் இலங்கையை இந்தியாவுடன் மேலும் விரிவான பேச்சுக்களை நடத்தத் தூண்டுவதாகவும் இருக்கின்றது.

பிரதமர் ரஜீவ் காந்தியுடன் நெருங்கிய தொடர்புடையவராகவும் பேராசிரியர் புல்ட் ஜென்ஸ் விளங்குகின்றார். எனவே இவரை மத்தியஸ்தராகக் கொண்டே இலங்கை அரசு இனப்பிரச்னை குறித்த பேச்சுக்களை எதிர்காலத்தில் மேற்கொள்ளலாம் என ராஜ

[2ம் பக்கம் பார்க்க]

## ஒல்லாந்து மதகுருவுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்!

(கொழும்புத்துறை)
பரந்தனில் இருந்து யாழ்ப்பாண செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட ஒல்லாந்து கத்தோலிக்க மதகுருவுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது.

பரந்தன் பங்குந்தந்தையான வண. பிதா சி. ஓம்லோ அண்

(2-ம் பக்கம் பார்க்க

### மட்டக்களப்பில்

## தீவிரவாதிகள் முகாம்மீது பொலிஸார் தாக்குதல்!

### மூவர் பலியானதாக அறிவிப்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்புக்கு சமீபத்தில் தீவிரவாதிகளின் முகாம் ஒன்றை நேற்றுக்காலை பொலிஸார் தாக்கியதுடன் அங்கு 3 பேரைக் கொன்றதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலின் போது பலவகையான ஆயுதங்களும், முக்கிய தகவல்கள் அடங்கிய தஸ்தாவேஜுக்களும் கைப்பற்றப்பட்டதாகவும்; நேற்று முன்தினய் பொலிசாரால் கைது செய்யப்பட்ட ஒரு தீவிரவாதியின் தகவல் மூலமே ''ஈழமக்கள் புரட்சிகர

[5-ம் பக்கம் பார்க்க]

## வங்கி ஊழியர் முடிவு

[யாழ்ப்பாணம்]
வங்கி ஊழியர்களின் கூட்டம் யாழ். நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது தொழிற்சங்கக்கூட்டுக்குழுவில்

(2-ம் பக்கம் பார்க்க)

### உமா, பிரபா, சபாவின்

# 2000 பயிற்சிபெற்ற தமிழ் தீவிரவாதிகள் நாட்டில் உள்ளனர்!

(கொழும்பு)
மூன்று தமிழ்விடுதலை இயக்கங்களைச் சேர்ந்த 2000 பயிற்சி பெற்ற தமிழ் தீவிரவாத இளைஞர்கள் தற்போது நாட்டில் உள்ளார்கள் என்றுபாதுகாப்பு அமைச்சுக்கு தகவல் தெரிந்துள்ளது.

பிரபாகரன், உமாமகேஸ்வரன், சிறிசபாரத்தினம் ஆகியோரது இயக்கங்களைச் சேர்ந்தவர்களே இவர்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவர்களின் தாக்குதலை சமாளிக்க இந்த ஆண்டு 6000இளைஞர்கள் இராணுவ பயிற்சி அளிக்கப்பட்டு இராணுவ-

(6 ம் பக்கம் பார்க்க)

## "தேசிய பாதுகாப்பு நிதி தமிழ் இளைஞர்களின் புனர்வாழ்வுக்கும்பயன்படும்"

### அமைச்சர் 'லலித்' கூறுகிறார்

(கொழும்பு)
''தீவிரவாதிகளால் தவறான வழியில் இட்டுச்செல்லப்படும் இளைஞர்களின் புனர்வாழ்வுக்காக தேசிய பாதுகாப்பு நிதி பயன்படுத்தப்படும்'' என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு நிதிக்கு அங்கீகாரம் அளிக்கும் சட்டம் நேற்று கொண்டுவரப்பட்டது. இதுதொடர்பாக அமைச்சர் லலித் ஆற்றிய உரையில் மேலும் ''சில இடதுசாரிகள் தேசிய பாதுகாப்பு நிதியை பரவலாக எதிர்த்து வருகின்றார்கள். எனினும் பொது மக்களின் ஆதரவு இருப்பதால் பெருமளவு நிதி சேர்ந்துள்ளது'' என்றும் தெரிவித்தார்.

[ரா]

### ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றோர்

# பலாலி இராணுவ முகாமில் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர்!

### படகு கடற்படைத் தளத்தில்

[யாழ்ப்பாணம்]
குருநகர்ப் பகுதியிலிருந்து ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்ற மூன்று மீனவர்கள் பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சென்ற 'செல்வமகன்' என்ற இயந்திரப் படகு காரைநகர் கடற்படைத் தளத்தில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 26-ந் திகதி ஜெயக்குமார் [வயது 23], அலோசியஸ் [வயது 27], கில்பேர்ட் வில்சன் [வயது 19] ஆகியோர் ஆழ்கடலில் மீன்

(6ம் பக்கம் பார்க்க)

### இலங்கை அகதிகள்

# வீடுகள் கட்டுவதற்கு மத்திய அரசு நிதி உதவி!

### வடஆர்க்காடு சுற்றுலா விடுதிகளிலும் தங்க ஏற்பாடு!

(சென்னை)
தஞ்சாவூர், கும்பகோணம், மாத்தூர் பகுதிகளில் 21 இலங்கைத் தமிழ் குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்கென 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவுக்கு மத்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

இதே வேளை அகதிகளாக வந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை சாத்தனூர் அணைக்

(6-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறும்!

### பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
வடபகுதியில் இடம்பெற்று வரும் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைகள் திட்டமிட்டபடி குறிப்பிட்ட திகதிகளில் இடம் பெறும் என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த வியாழன், வெள்ளிக் கிழமைகளில் இடம்பெற்ற குழப்பங்கள் காரணமாக பரீட்சைகள் தடைப்படலாம் என அஞ்சப்பட்டது இதனையடுத்தே பரீட்சைத்திணைக்களம் பரீட்சைகள் எதுவித மாற்றமுமின்றி இடம் பெறும் எனத் தெரிவித்துள்ளது.

4-ம் [இன்று] 5-ம், 6-ம், 7-ம், 8ம் திகதிகளில் எஞ்சிய பரீட்சைகள் இடம் பெறவுள்ளன. கடந்த வாரம் யாழ்ப்பாணம் கல்லுண்டாய் வெளிப்பகுதி

[2ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினால் கல் அரித்து தயாரிக்கப்படுபவை ர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் வினியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு. கொக்குவில். 1909

அராலி தெற்கு சரஸ்வதி மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் வீதியோரத்தில் 3½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். திருமதி ந, கனகம்மா அராலி மேற்கு வட்டுக்கோட்டை. 2096

இரண்டரைமாத உயர்இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் (பொலிஸ் இனம்) இரண்டு விற்பனைக்குண்டு. ஒன்று பெண். மற்றது ஆண். கவர்ச்சியான கறுப்பு நிறம், தொடர்பு; 83 A, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 2098

### தேவை.

எமது பேக்கரிக்குப் பாண், பணிஸ், பிஸ்கட் தயாரிப்பதில் அனுபவம் உள்ள வேலை ஆட்கள் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். உடனே நேரில் வரவும். ஹோட்டல் றெலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2094

நல்லூர் திருநெல்வேலி பகுதி பிள்ளைகளின் நலன் கருதி யாழ். நகரில் உள்ள பாடசாலை அனைத்திற்கும் பஸ்சேவை ஆரம்பித்துள்ளோம். பஸ்சேவை திருநெல்வேலி சந்தியில் ஆரம்பித்து சுண்டுக்குளி மகளீர் கல்லூரி வரையும் நடைபெறும். தொலைபேசி இல. 24255, தொடர்பு: ராம்கான் புத்தகசாலை, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி. 2073

### வாடகைக்கு

கோண்டாவில் கிழக்கு இருபாலை றேட்டில் தண்ணீர் ராங்கிக்கு முன் சகல வசதிகளுடன் கூடிய புதிய மாடி வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். என். குணநாயகம், கோண்டாவில்கிழக்கு, கோண்டாவில். 2074

### சேவை

நல்லூர் திருநெல்வேலிப் பகுதிப் பிள்ளைகளின் நலன் கருதி யாழ். நகரில் உள்ள பாடசாலை அனைத்திற்கும் பஸ்சேவை ஆரம்பித்துள்ளோம். பஸ்சேவை திருநெல்வேலிச் சந்தியில் ஆரம்பித்துச் சுண்டுக்குளி மகளீர் கல்லூரி வரையும் நடைபெறும். தொடர்பு:- ராம்கரன் புத்தகசாலை, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி. தொலைபேசி இல: 24255. 2073

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில்

மல்லாகம் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா சிவப்பிரகாசம் என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

—மரணமெய்தியவர்

சிவசம்பு கந்தசாமி
நீதிமன்ற ஒழுங்கை
மல்லாகம்.

—மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. ரி/229

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்துக்களை நிருவகிப்பதற்கு ஆகமேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு பங்குனி மாதம் 20-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985-ம் ஆண்டு தை மாதம் 7-ம் திகதி

நீதிமன்ற ஆணைப்படி
சு. வேலாயுதம்
பதில் பதிவாளர்.

வரைவு
தி. ஜெகதீசன்
மனுதாரின் சட்டத்தரணி.
2078

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## உறுப்பினர்கட்கு ரூ. 7500 கடன்

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவைக் கூட்டுறவுச் சிக்கனச் சேமிப்புக் கடன் நிவர்த்திச் சங்கம், சங்க உறுப்பினர்களுக்கு விசேடகடனாகத் தலா 7500/- ரூபாவை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இக்கடனைப்பெற விரும்புபவர்கள் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கச் செயலாளர் திரு சி. செல்லத்துரை தெரிவித்துள்ளார்.

## முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற நாகநாதன் குமாரசுவாமி, மகேசவாசம், கொடிகாமம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்.

—மரணமெய்தியவர்

மகேஸ்வரி குமாரசவாமி
'மகேச வாசம்' கொடிகாமம். —மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்கம்.
இல: 3863

மேலேயுள்ள இலக்கங்கொண்டவழக்கு மேலேபெயர் குறிப்பிட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1984ம் ஆண்டு மார்கழி மாதம் 26 நாளன்று அதில், அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக்கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைவு
இ. சிவசுப்பிரமணியம்
மனுதாரின் பதிவுபெற்ற
சட்டத்தரணி.
2057

## Jaffna College Technical Institute Vaddukoddai

NEW ADMISSION:- E. C. E (Lond) Part I - 1986

Application for admission to follow full time course of study, preparing for Engineering Council Examination (Lond) Part I - May 1986 are accepted till 15th March, 1985.

Minimum 2 G. C. E. (A/L) passes in Mathematics and Physics are required.

Application form and Prospectus Rs. 25/- available at the Office. Course fee Rs. 3000/-

Classes commence on 18-3-1985,

DIRECTOR

2091

## இனப்பிரச்னை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தந்திர வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைத் தமிழ்தீவிரவாதிகளுடனும் அரசாங்கம் இவர் மூலமாக பேச்சுக்களை நடத்த முன்வரலாம் என்றும் நம்பப்படுகின்றது.

பேராசிரியர் புல்ட்ஜென்ஸ் இலங்கை இந்திய தொடர்புகளில் நிலவும் சில முரண்பாடுகள் குறித்தும் அண்மையில் நகைச்சுவையாக கீழ்க்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

''இந்தியாவுடன் இலங்கை இராஜதந்திர ரீதியில் மோத நினைப்பது இலங்கையின் பிரபல கோழிக் கள்வன் ''குசகுள்சாளியா'' உலகக் குத்துச் சண்டை வீரர் முகமது அலியுடன் மோதநினைப்பது போன்றதாகும்'' என்று தெரிவித்தார்

## இன்றைய பலன்

மாதம் மாசி
திகதி—21[4-3-1985]
வாரம்—திங்கள்
திதி—துவாதசி பிற்பகல் வரை
நக்ஷத்திரம்—பூசம் முன் இரவு வரை

மேடம்:- தொழில் விடயத்தில் தொல்லைகள் தோன்றும் பொது விவகாரங்களில் தலையிடுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

இடபம்:- லாபகரமான காரியங்களில் மந்தநிலை தென்படும் சகோதரர் விடயத்தில் எச்சரிக்கை வேண்டும்.

மிதுனம்:- எம் முறையைக் கொண்டவர்களாளடு நம்பி நடக்கக் கூடாது.

கடகம்:- தேகநிலையில் சோர்வு தென்படும் உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

சிங்கம்:- பேச்சுவார்த்தையில் எதிர்ப்புகள் உருவாகும் எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

கன்னி:- இளைய சகோதரத்தினுல் இன்னல்கள் தோன்றும் முயற்சியும் தடைப்படும்.

துலாம்:- அன்னை வழியால் சோர்வு ஏற்படும் அபாயகரமான விடயங்களில் ஈடுபடக் கூடாது.

விருச்சிகம்:- பிள்ளைகளினுலும் தொல்லைகள் உண்டு செய் தொழிலிலும் மந்தம் தோன்றும்.

தனுசு:- பிரயாணத்தின் மூலம் பொருள் நழுவக்கூடும் பகைவர் பதுங்குவர்.

மகரம்:- மனதில் விரக்தி தோன்றும் குடும்பத்திலும் சோர்வு நிலை தென்படும்.

கும்பம்:- ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரும்.

மீனம்:- அருளும் பொருளும் இணைந்து கிடைக்கும் இறைவழிபாடு விரும்பத்தக்கது.

திருமலை
வே. ரவீந்திரன்

## பார்த்தசாரதி மீது அதிருப்தி?

இத்தவேளை இந்தியாவின் சார்பில் இதுவரை இலங்கை இனப்பிரச்னை விவகாரத்தில் தலையிட்ட திரு. கோபால சுவாமி பார்த்தசாரதி தொடர்ந்தும் இவ்விவகாரத்தில் தலையிடுவதை இலங்கை விரும்பவில்லையென்றே தெரியவருகின்றது.

இவரின் யோசனைகள் இலங்கைத்தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிபந்தனைகளை வலியுறுத்துவதாகக் காணப்படுவதாக இலங்கைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எனவே இலங்கை இனப்பிரச்னை விவகாரத்தில் பார்த்தசாரதிவகித்த பங்கினை இலங்கையின் சார்பில்புல்ட்,ஜென்ஸ் வகிக்கலாம் என்ற நம்பிக்கை ராஜதந்திர வட்டாரங்களில் வலுவடைந்து வருகிறது.

## க.பொ.த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும், தொடர்ந்து கிளிநொச்சியிலும் பெரும் குழப்ப நிலைகாணப்பட்டது. இதனுல் பரீட்சார்த்திகளும் அவர்களின் பெற்றோர்களும பரீட்சைகள் மீண்டும் குழப்பமடையுமோவென அஞ்சியிருந்தனர்.

பரீட்சைகள் இடைநிறுத்தப்படமாட்டாதென கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. ஆயினும் இந்த விசேட பரீட்சைகள் குழப்பப்பட்டால் மீண்டுமொரு தடவை இது போன்ற சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கது. [கி

## ஒல்லாந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மையில் யாழ்ப்பாணம் செல்வதற்காகப் பஸ் வண்டியில் வந்தபோது ஆனையிறவு தடை முகாமில்வைத்து யாழ் மாவட்டத்திற்குள் செல்லக் கூடாது என்றுதடைவிதித்துத் திருப்பியனுப்பப்பட்டிருந்தார்

தற்போது பாதுகாப்பமைச்சின் உத்தரவுடன் வண பிதா ஓம்லோ யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது வண. பிதா ஓம்லா ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்தவரென்பது குறிப்பிடத்தக்கது

வெளி நாட்டவர்கள் யாழ்ப்பாண மாவட்டம் செல்லுவதற்கு முன்பு விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை தொடர்ந்து இவர் யாழ்ப்பாணம் செல்லுவதற்கு முன்பு அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. (கி)

## வங்கி ஊழியர்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பங்கு பற்றுவது தொடர்பாக ஆராயப்பட்டு கூட்டுக் குழுக் கூட்டத்தில் சலந்துகொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதென முடிவு எடுக்கப்பட்டது. (க)

## பிறந்ததின வாழ்த்து

### ஷொர்பா தர்ஷாயினி



ஊர்காவற்றுறை கிழக்கைச் சேர்ந்த ஜெயராஜ் சியாமளா தம்பதிகளின் புதல்வி ஷொர்பா தர்ஷாயினி தனது 2 வது பிறந்த நாளை 4-3-85 No: 37, மாட்டின் லேனிலுள்ள தமது வீட்டில் கொண்டாடுகிறுர்.

இவரை பிரான்ஸ் டடா, அம்மா, தம்பி தனுஸ், டடா அப்பா, டடா அம்மா, அம்மம்மா, தாத்தா, பூட்டா, பிரான்ஸ் தொட்டப்பா, தொட்டம்மா, ரஷ்யா பெரியப்பா, பெரியம்மா, அமெரிக்கா சின்னப்பா, சின்னம்மா, கனடா சீனிபப்பா, மாமாமார், குமுதினி அண்டா, அக்காமார் சுபாசினி, சுதர்சினி, றெமோஷனி, அண்ணுமார் ரமேஸ், சுரேஸ். கிசோ, ருபேஸ், ரஜேஸ் ஆகியோர் இறைவன் அருளால் சகல செல்வங்களும் பெற்று நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறுர்கள். (2069

1 ஸ்பெயின் பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.
2 குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்
2-வது மாடி, கொழும்பு-1
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

மணிவாக்கு

வித்தன்றி யாதும்
விளைவதுண்டோ, நின்னருளாஞ்
சித்தன்றியாங்களுண்டோ
செப்பாய் பராபரமே.

— தாயுமானவர்

# நமதுநோக்கு

## பெரிய சோதனை வருகிறது பேராற்றல் வேண்டும்

இடுக்கண்களும் இன்னல்களும் பெரியவைகளாகத் தோன்றி நம்மைத் துன்புறுத்தும்போது என்ன செய்வதென்று திகைக்கிறோம். ஆழ்ந்து சிந்திப்பதற்கும் முனைந்து முயல்வதற்கும் அதுவே உற்ற தருணம் என்பதை மறந்துவிடுகிறோம்.

நாம் மீளமுடியாத முட்டுக்கட்டை ஒரு நாளும் எமக்குப் போடப்படுவதில்லை. ஒவ்வோர் இடரையும் அகற்றுவதற்கு உற்றதோர் உபாயம் உண்டு. இது இயற்கையின் நியதி.

வடபகுதியில் மீண்டும் நடத்தப்படும் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை எவ்வித குழப்பமுமின்றி நடைபெறுவது இதற்கொரு சான்றாகும். மக்கள் குரல் என்றாலென்ன, பொதுஜன அபிப்பிராயம் என்றாலென்ன, அதற்கு மதிப்புண்டு என்பது இதன் அர்த்தம்.

முந்திய பரீட்சை குழம்பியவிதம், அந்தச் சூழ்நிலைக்குச் சிறப்பான காரணமாகலாம், அதனை ஆராய்ந்து இன்றைய வெற்றிக்கு தவறான கருத்து கற்பிக்க தமிழ் மக்களின் நலனை விரும்பாத தீயசக்திகள் தவறவில்லை.

எவ்வித குழப்பமும் எலவரமும் தீங்கானதென்றும் அதில் ஈடுபடுபவர்கள் எல்லோரும் சமூக விரோதிகள் என்றும், அரசின் எதேச்சாதிகாரத்துக்குத் தலை வணங்குபவர்கள்; அதனை எதிர்த்துச் சவால் விடத் தைரியமில்லாதவர்களே பொறுப்புடைய சமூகம் என்று அர்த்தம் வழங்கப் படுகிறது.

இத்தகைய மனப்போக்கும் இதனால் வெளிவரும் வறட்டுவேதாந்தமுமே தமிழ் இளைஞர்களைத் தீவிர வாதிகளாக்கியது நாமறிவோம்.

குட்டக் குட்ட நாம் குனிந்ததுபோல் தெரிந்தாலும் என்றும் சமநோக்கை நாடும் இந்நாட்டுத் தமிழ் மக்கள் அநீதிக்கு உடன்பாடாக நடந்ததில்லை; நடக்கப்போவதுமில்லை என்பதும் இன்று தெளிவாகின்றது.

வாழ்விலும் . தாழ்விலும் சமத்துவபுத்திபறிபோகாது பேணும் ஆற்றல் தமிழ் சமுதாயத்தின்பிறவிச்சொத்து. இவர்கள் இந்த நாட்டின் சிறுபான்மையரென்ற கருத்தே இந்த நீண்ட போராட்டத்தின்காரணம்.

ஆனால் இவ்வித சமநோக்கு ஒரு துரு பிடித்த ஆயுதம்போல் மக்களின் நலனுக்கு உதவாது போவதுமுண்டு; இந்தநிலை சமுதாயரீதியில் எப்போது உண்டாகுமென்று சொல்வது எளிதல்ல.

காரணகாரிய தொடர்பில் அமையும் விஞ்ஞானப் போக்கு மனித விவகாரங்களில் செயற்படும்விதம் இலகுவில் புலப்படுவதில்லை.

எனவே இந்தநாட்டில் வாழ்ந்துவரும் தமிழ்மக்கள் பஸ்ஸை விட்டுவிட்டார்களா, எப்போது? இன்றேல் கடைசிபஸ் எது, எப்போது என்ற வினாக்களுக்கு அரசியல் நிபுணர்கள், மிதவாதிகள் விடைகாணட்டும்.

இன்று பெரும்பாதிப்படைந்த இளைஞர்சமூகம் இந்த ஆராய்ச்சியின் பெறுபேறுக்கு காத்திருக்க மாட்டாதென்பது வெளியாய்விட்டது.

பொறுமைக்கு எல்லை காண்பது மிகக்கடினம்; இளமைக்கும் ஏமாற்றத்துக்கும் எட்டாம் பொருத்தம். தீவிரப்படும் இளைஞர்கள் பொறுப்பற்றவர்கள் என்று சொல்வது இலகு. அவர்களின் வேகத்துக்கு வேண்டியவாறு வரம்பமைப்பது நோக்கத்தில் விசுவாசம் கொண்டவரின் பொறுப்பு. எந்த நிலையிலும் நோக்கத்தைக் கைவிடாது தோல்வியைக் கண்டு அஞ்சாது போராட்டம் தொடர்வதானால் இலகுவில் காரியசித்தி கிடையாவிட்டாலும் இறுதியில் வெற்றியென்பது திண்ணம்; அழிவுக்கு இடங்கொடாது அமைதிக்கு மதிப்பளிப்பது போரின் பேரம்சம்.

தமிழர் விடுதலை என்ற பெருநோக்கம் பெரிய சோதனைக்குள்ளாகும் கட்டம் தென்படுகின்றது; 'சமாதானம் என்றசத்தம்' எழுப்பப்படுகிறது.

உலகின் கவனத்தையும் அனுதாபத்தையும் பெற்றிருக்கும் விடுதலை இயக்கம் முறிந்து போவதில் அல்லது பலவீனப்படுவதில் ஆசைகொண்ட தீயசக்திகள் தமக்குத் தோல்வி தோன்றும் நிலையில் வஞ்சனையால் போலிச் சமாதானத்துக்கு முயற்சி செய்யும்.

ஏமாற்றி உருசிகண்ட அனுபவம் இலகுவில் நீங்காதென்றால் சூடுகண்ட பூனை [இன்று புலி] அடுப்படியை நாடவேண்டியதில்லை.

ஏமாந்த சமூகத்தை மீண்டும் கூறுபோட்டு தமிழர்களில் மிதவாதிகள் எவரும் இருப்பதுபோல் பாசாங்குசெய்து தேசிய ஒற்றுமை என்ற போர்வையில் திருவிளையாடல்களுக்கு இடமுண்டு.

போர் பெரிய சோதனை; அதனிலும் பெரியது சமாதானம்; கடந்த இரண்டாவது உலக யுத்த வரலாறு இதனை விளக்குகிறது.

பெரிய சோதனைக்கு பேராற்றல் வேண்டுமென்பது நினைவிருக்கட்டும்.

சென்னையில் நேற்று வெளியான 'ஆனந்தவிகடன்' ஆசிரியத் தலையங்கம்

# 'அன்னையின் காலடியில் அழுகுரல்'

[3--3-85 திகதிய 'ஆனந்த விகடன்' வார இதழில் ''அன்னையின் காலடியில் அழுகுரல்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள ஆசிரியத் தலையங்கத்தை அப்படியே இங்கு தருகிறோம்.] (ஆ-ர்)

பாரத அன்னையின் காலடியை குமரிக் கடல் நனைத்தது ஒரு காலம். இன்று இலங்கைத் தமிழர் வடிக்கும் குருதி நனைத்துக்கொண்டிருக்கிறது.

பல தலைமுறைகளுக்கு முன்னால் ஈழம் சென்று அந்த நாட்டை வளப்படுத்தியவர்கள் தமிழர்கள். இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களின்பேரால் தாயகத்துக்கு விரட்டப்பட்ட லட்சக்கணக்கானவர்களைத் தவிர அங்கேயே வாழ உரிமை பெற்ற தமிழர்களும்இப்போது அகதிகளாக ஓடிவந்துகொண்டிருக்கின்றனர். எங்களைக் காப்பாற்றுங்கள் என்று பாரத அன்னையின் காலடியைப் பிடித்துக் கதறும் ஈழத் தமிழ் அகதிகளின் அழுகுரல் ராமேஸ்வரத்திலும் தூத்துக்குடியிலும் ஒலிக்கிகிறது.

இலங்கையிலிருந்து வருகிற செய்திகளைப் படிக்கும்போதும் அகதிகளின் துயரக் கதைகளை அறியும்போதும் நாம் நாகரீகமான உலகத்தில் வாழ்கிறோமா என்ற சந்தேகமே ஏற்படுகிறது.

(தணிக்கை)

தமிழ்த்தீவிரவாதிகள் என்று குற்றஞ்சாட்டப்படுவோர் இலங்கை இராணுவத்தோடு மோத நேரும்போது சாதாரண சிங்கள பொதுமக்கள் ஒருவர்கூட பாதிக்கப்படுவதில்லை. இலங்கை அரசே அப்படி குற்றஞ்சாட்டமுடியவில்லை.ஆனால் தீவிரவாதிகளைப் பிடிப்பதாகக் கூறிக்கொள்ளும் இலங்கை இராணுவமோ தமிழ் இனத்தையே பூண்டோடு அழிக்கும் மாபாதகச்செயல்களைச்செய்து வருகிறது.

இந்தியாவின் குரலும் மனித இனத்தின் குரலும் இலங்கைத் தமிழர்களுக்காக பரிந்து ஒலிப்பது ஒருபுறமிருக்கட்டும். சிங்கள சகோதரர்களைக் கேட்கிறோம் உங்களிடையே பண்பாடு உடைய படித்த மேதைகள் இல்லையா? நடுநிலை தவறாத நீதிமான்கள் இல்லையா? புத்தரின் கருத்துக்களை இதயத்தில் தேக்கி வைத்திருப்பவர்கள் இல்லையா? கௌரவர் சபையில் அநீதி தலைவிரித்தாடிய போதுஅதிகாரத்துக்குப்பயந்து மாவீரர்களும் மேதைகளும் மௌனமாக இருந்தது போல உங்கள்மண்ணில் ஒரு உயர்ந்த இனம் படுகொலைக்கு ஆளாவதைக் கண்டும் காணாமல் நீங்கள் வாய்மூடி இருப்பது மனித தர்மமா?

# "தொழிலாளரை விரோதித்து இன விடுதலை பெறமுடியாது"

(சுண்டுக்குளி)

''அரசாங்கத்தின் கெடுபிடிகள் ஒருபுறத்திலும் தீவிரவாத இளைஞர்களின் செயற்பாடுகள் மறுபுறத்திலும் செயல்படும் பொழுது பாக்குவெட்டிக்குள் அகப்பட்ட பாக்கின் நிலையில் தான் வங்கி ஊழியர்களும் ஏனைய தொழிலாளி வர்க்கமும் செயல்படவேண்டிய துர்ப்பாக்கியநிலை எமது பிரதேசத்தில் ஏற்பட்டுள்ளது. தேசிய இனப் பிரச்னையைப் பூரணமாக ஜனநாயகமுறையில் தீர்ப்பதன்மூலம்தான் இதற்கு விடிவுகாணமுடியும்.''

இவ்வாறு வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுவின் அமைப்பாளரும் கம்யூனிஸ்ட்கட்சியின் வடபிரதேச உதவிசெயலாளருமான திரு. எஸ். விஜயானந்தன், யாழ். நிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை வங்கி ஊழியர் சங்க யாழ் கிளைக் கூட்டத்தில் சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

இலங்கை வங்கி ஊழியர் சங்க யாழ் கிளைத் தலைவர் திரு. வி தில்லைநாதன் இக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். திரு. விஜயானந்தன் பேசியதாவது:

வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு பலமுயற்சிகளின் பின்புதான் உருவாக்கப் பட்டது. தேசிய ரீதியாக இயங்குகின்ற தொழிற்சங்கங்களும் பிராந்தியரீதியில் இயங்கும தொழிற்சங்கங்களும் இணைந்து இதில் செயல்படுகின்றன. இக் குழு தமிழ் பிரதேசத்தில் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அடக்குமுறைகளை எதிர்த்து போராடி வருகின்றது தென்னிலங்கையிலுள்ள தொழிலாளர்களும் சாதாரண சிங்களப் பொது மக்களும் தமிழ் மக்களின் பிரச்னைகளை தெளிவாக அறிந்து அதன் தீர்வுக்காக குரல் கொடுத்து போராடாத வரை இப் பிரச்னை பூரணமாக தீரப்போவதில்லை. எமது உரிமைகளுக்காக நாமே போராடவேண்டும். பிறிதொருவர் எமது உரிமைக்காக போராடிப் பெற்றுத் தருவார்கள் என்பது பிரச்னையின் நிரந்தர தீர்வுக்கு வழிவகுக்காது. அதற்காகத்தான் எமது கூட்டுக்குழு நாம் நடத்தும் போராட்டத்திற்கு தென்னிலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் உதவியை நாடியுள்ளது. தொழிலாளி வர்க்கம் ஐக்கியப்பட்டு செயல்படவேண்டும். தொழிலாளர்களின் ஐக்கியமான செயல்பாடுகள் தாமதமாகும்வரை எமது சுயநிர்ணய உரிமைகள் பின்தள்ளப்பட்டுக் கொண்டே போகும் ஒரு தேசிய இனத்தின் விடுதலை அவ்வினத்தின் உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமையான செயற்பாட்டில் தான் தங்கியுள்ளது. உழைக்கும் வர்க்கத்தை விரோதித்தோ அல்லது அவர்களின் செயல்பாடுகள் இல்லாமலோ இனவிடுதலைக்கு வழிபிறக்க மாட்டாதென்பதை வட பிராந்திய கூட்டுக்குழு பல நடவடிக்கைகள் மூலம் பற் பல சந்தர்ப்பங்களில் ஆட்சியாளருக்கு பலவழிகளில் எடுத்துக்காட்டியுள்ளது.

## தவக்காலத்தின்



## 13-ம் நாள்

''உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்க முள்ளவராய் இருங்கள்.'' [லூக்:6/36]

இறைவன் இரக்கத்தின் ஊற்றுஅந்த ஊற்றிலே பெருக்கெடுத்த அருள் மழையிலே நான் இரக்கம் பெற்றேன். தன் இரக்கம் என்னோடு என்றும் இருக்க வேண்டுமென்று விரும்பும் அவர் என் அயலவனுக்கு நான் அதைக் கொடுக்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறார். நான் இரக்கமுள்ளவனாக வாழ்கின்றேனா?

கண்டனம், பழிசுமத்தல், அநியாயத் தீர்ப்பு ஆகிய போலி மதிப்பீடுகளில் நான் உழன்று என் அயலவர்களை வதைக்கின்றேன். நீதியை எதிர்பார்க்கும் நான் நீதி வழங்க மறுக்கின்றேன். இரக்கம் பெற விளையும் நான் இரக்கம் காட்ட தவறுகின்றேன். கண்டனம் பெற விரும்பாத நான் கண்டனம் செய்கிறேன். ஆகையால் நான் இறைவனின் இரக்கத்திற்கு தகுதியற்றவனாகின்றேன்.

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாமல், வெளிவேடக்காரர் பரிசேயர் சூசேயர் போலவாழ்ந்து 'ஐயோகேடு' என சபிக்கப்படாமல் நீதியினதும், இரக்கத்தினதும் உறைவிடமாய் இறைவனை ஏற்று உண்மை வழியில் வாழ்வேனாக.

அருள் திரு. ம. போல் நட்சத்திரம், அ.ம.தி

## ஒரு தடவையே படகுச் சேவை

(கொழும்புத்துறை)

தினமும் மூன்று தடவைகள் நடாத்தப்பட்டு வந்த நெடுந்தீவு-குறிகாட்டுவான் படகுப் போக்குவரத்துச் சேவை தற்போது ஒரு தடவையே நடாத்தப்படுகின்றது.

இப்படகுச் சேவை ஒரு தடவையாகக் குறைக்கப்பட்டதால் பிரயாணிகள் மிகுந்த கஷ்டமடைந்து வருகின்றனர்.

இப்படகுப் போக்குவரத்துச் சேவை காலை 7-மணிக்கு நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்குப் புறப்படும. பிற்பகல் 2.30 மணிக்குக் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்குப் புறப்படும்.

# லெபனுன் ஷியா கிராமம் மீது

# இஸ்ரேல் கடும் தாக்குதல்!

## நிலைமை தொடர்ந்தால் பதிலடி என்கிறது லெபனுன்

பெய்ரூட், மார்ச் 3

**தெற்கு லெபனுனில் உள்ள முஸ்லிம் ஷியா கிராமம் ஒன்றினை இஸ்ரேலியப் படைகள் சுற்றி வளைத்து பெரும் தாக்குதலை நடத்தியுள்ளன.**

இஸ்ரேலின் சுமார் 1000 ஆக்கிரமிப்புப் படை வீரர்கள் இக்கிராமத்தை சுற்றிவளைத்து அங்கிருந்த சகல இளைஞர்களையும் கைது செய்து விசாரணைக்காகக் கொண்டு சென்றுள்ளனர். இப்படைகள் அங்கு சில வீடுகளையுத் தகர்த்ததோடு வாகனங்களையும் தீயிட்டதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலியானுர். இருவர் படுகாயமடைந்தனர்.

இஸ்ரேலின் இத்தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தொடருமானுல் பதிலடியாக லெபனுனும் வடக்கு இஸ்ரேலில் உள்ள இஸ்ரேல் கிராமங்கள்மீது கடும் தாக்குதலை மேற்கொள்ளும் என்று லெபனுன் அமைச்சரும் ஷியா முஸ்லிமுமான ரவிபாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

லெபனுன் மீது இஸ்ரேல் மேற்கொண்ட மிகப்பெரிய தாக்குதல் இதுவாகும். [சூ]

---

# இராமேஸ்வரம் கடலில் அழுகியநிலையில் சடலங்கள்!

[சென்னை]

இராமேஸ்வரம் கடற்கரையில் அழுகிய நிலையில் மூன்று சடலங்கள் ஒதுங்கியுள்ளன.

இராமேஸ்வரத்திலிருந்து ஏழு கிலோ மீற்றர் தூரத்தில் இச்சடலங்கள் ஒதுங்கின. இராமேஸ்வரம் பொலிஸார் சடலங்களை எடுத்துச்சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இலங்கையிலிருந்து இராமேஸ்வரம் வந்த அகதிகள் படகுகள் கவிழ்ந்ததில் இறந்திருக்கலாம் என்று பொலிசார் தெரிவித்தனர். [சூ]

---

# கைதடியில் ஏற்பட்ட திடீர் பதற்றம்!

[சாவகச்சேரி]

கைதடிச் சந்தியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினுல் ஒரு சில மணித்தியாலங்கள் அங்கு பதற்றம் நிலவியது. கடைகள் யாவும் இழுத்து மூடப்பட்டன. பொதுமக்கள் புகலிடந்தேடி ஓடினர்.

நேற்று முன்தினம் மாலை லொறி ஒன்றிலும், டிராக்டர் ஒன்றிலும் வந்தவர்கள் மீது சீருடையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைத் தொடர்ந்து லொறியிலும், டிராக்டரிலும் வந்தவர்கள் வாகனங்களை விட்டுவிட்டு இறங்கி ஓடினர். இதனுல் பரவலாக எங்கும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

அனுதரவாக நின்ற லொறியையும், டிராக்டரையும் சீருடையினர் எடுத்துச்சென்றனர். வீதியில் கிடந்த சைக்கிள்கள் சிலவற்றையும் அவர்கள் எடுத்துச்சென்றனர்.

---

பங்களாதேஷில்

# இராணுவச்சட்டம் அமுல், தேர்தல்கள் இடைநிறுத்தம்!

(டாக்கா)

பங்களாதேஷில் மீண்டும் இராணுவச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதோடு அடுத்த மாதம் 6ம் திகதி நடைபெறவிருந்த பாராளுமன்றத் தேர்தல்களும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

ஆயினும் தமது ஆட்சியைத் தொடர்ந்து நீடிப்பதற்கு இம்மாதம் 21ம் திகதி நாடு முழுவதும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தப்போவதாக ஜனுதிபதி லெப்டினன்ட் எர்ஷாட் அறிவித்துள்ளார்.

ஜனுதிபதி எர்ஷாட் பங்களாதேஷில் மீண்டும் ராணுவச்சட்டத்தை அமுல்படுத்தியதிலிருந்து அங்கு பெரும் வன்முறைகள் மூண்டுள்ளன. இதனுல் தலைநகர் டாக்காவிலும் ஏனைய சில பகுதிகளிலும் ஊரடங்குச் சட்டம் இரவு நேரத்தில் அமுல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

---

## பண்ணிசை போட்டிகள்

(பண்டத்தரிப்பு)

கீரிமலை சிவநெறிக் கழகத்தினர் நடாத்தும் நாவன்மை, பண்ணிசை போட்டிகளின் இறுதி நிலைப்போட்டிகள் இம்மாதம் 16ம் திகதி சனிக்கிழமை முற்பகல் சுன்னுகம் இராமநாதன் மகளிர் கல்லூரியிலும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. இதற்கான ஒழுங்குகளை கழகச் செயலாளர் ஆசிரியர் திரு. ச. விநாயகரத்தினம் செய்துள்ளார்.

---

## திருத்தம் வரும்

[புலோலி]

அபிவிருத்திச் சபைகளில் கடமைபுரியும் எல்லா அலுவலர்களும், ஊழியர்களும் உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளனர், இதன்படி படையில் உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தில் திருதித்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன என்று அறிவிககப்பட்டுள்ளது.

இதனுல் அபிவிருத்தி சபைகளில் பணிபுரியும் பல அலுவலர்களும், ஊழியர்களும் பெருநன்மை அடைவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

---

## தொழில் நுட்பக் கல்லூரி தரமுயர்கிறது

[கொழும்புத்துறை]

கொக்குவில் யாழ். பல்தொழில்நுட்ப நிறுவனம் முதலாம்தர தொழில் நுட்பக் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இத்தொழில் நுட்பக் கல்லூரியை தரமுயர்த்துமாறு நீண்டகாலமாகக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுவந்ததைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

---

## பங்கீட்டுக்கு மண்ணெண்ணை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள்மூலம் மண்ணெண்ணை பங்கீட்டு அட்டைக்கு 2 லீட்டர் வீதம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றது. அதேவேளை பண்டத்தரிப்புத் தனியார் எரிபொருள் விற்பனை நிலையத்திலும் கடந்த வாரம் ஆளுக்கு 5 லீட்டர் விதம் மண்ணெண்ணை வழங்கப்பட்டுள்ளது.

---

# 'மருந்துகளைக்கவனமாக உபயோகியுங்கள்'!

[பண்டத்தரிப்பு]

'மருந்து வகைகள், பிராணவாயு, தடுப்பு ஊசி, திரிபோஷா, சீருடைகள், காகிதாதிகள் ஆகியவற்றை கொழும்பிலிருந்து தருவித்து விநியோகம் செய்வதற்கு உபயோகிக்கப்பட்டு வந்த எமது சுகாதாரப் பகுதி வாகனங்கள் யாவும் கடத்திச்செல்லப்பட்டுவிட்டதால், வைத்திய நிறுவனங்களுக்கு இவற்றை விநியோகம் செய்வதில் தடை ஏற்பட்டுள்ளது. நிறுவனங்கள் யாவும் தத்தமது கைவசமுள்ளவற்றை மிகவும் சிக்கனமாக உபயோகித்து முடிந்தளவு கொண்டு நடாத்துதல் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.'

இவ்வாறு யாழ் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். கே. மாணிக்கம் தமது பிரிவிலுள்ள அரசாங்கவைத்திய சாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் மற்றும் சுகாதார நிறுவனத் தலைவர்களுக்கும் நேற்று அனுப்பிவைத்துள்ள அவசர சுற்று நிருபத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

---

# கிளிநொச்சி பிரஜைகள் குழு ஆட்சேபம்

[கிளிநொச்சி]

கடந்த பொங்கல் தினமான ஜனவரி 14-ம் திகதி கிளிநொச்சியில் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான ஐந்துபேரதும், மற்றும் காயமடைந்தவர்கள் தொடர்பான விசாரணைகள் வவனியாவில்வைத்து நடைபெறவுள்ளதற்கு கிளிநொச்சி பிரஜைகள் குழுவினர் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமிடத்து சாட்சிகளை உரிய முறையில் விசாரிக்க வசதியாக இருக்குமெனவும் பிரஜைகள் குழுவினரும் தமது சாட்சியத்தை அளிக்கக்கூடியதாக இருக்குமென்றும், எனவே கிளிநொச்சியில் விசாரணைகளை நடத்துமாறும் வவனியா பொலிஸ் சுப்பிறீண்டனை பிரஜைகள் குழுவினர்கோரி உள்ளனர்.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவினர் கிளிநொச்சி இணைப்பதிகாரி மேஜர் குலதுங்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து நான்கு இளைஞர்கள் விடுவிக்கப்பட்டதாக பிரஜைகள் குழு உபதலைவர் டாக்டர் கே சுப்பையா தெரிவித்தார்.

---

## மானிப்பாய் ஆஸ்பத்திரியில் தட்டுப்பாடு

[சுண்டுக்குளி]

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் மருந்து கட்ட வரும் நோயாளர்களுக்கு பன்டேஜ், பிளாஸ்டர், பஞ்சு முதலியன இல்லாததால் துணியுடன் வரவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் சாதாரண வருத்தத்திற்கு பாவிக்கப்படும் பனடோல், அல்றெக்ஸ் முதலிய குளிசைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவ்வைத்தியசாலையில் இரு மலசல கூடங்கள் இருந்தும் அதற்கு கதவுகள் இல்லாமல் இருப்பதாலும் கிணறு இருந்தும் தண்ணீர் எடுப்பதற்கு பைப் வசதியோ அல்லது துலாவசதியோ செய்து கொடுக்கப்படாததாலும் இங்கு பிரசவத்திற்காக வார்ட்டில் அனுமதிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார் பெரும் சிரமத்தைஎதிர்நோக்குகின்றனர்.

---

## நவாலிதெற்கு சமாதானசபை

[சுண்டுக்குளி]

நவாலியில் உள்ள ஐந்து சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் நவாலி தெற்கு சமாதானசபை ஒன்றை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

---

## புல்லாங்குழல் நமசிவாயம் ஓய்வுபெறுகிருர்

இன்று இலங்கையில் விரல் விட்டு எண்ணக்கூடிய புல்லாங்குழல் வித்துவான்களில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி திரு. அருணுசலம் நமசிவாயமும் ஒருவர். இசையைத்தனது உயிரென மதிக்கும் இவர் தமது அறுபதாவதுவயதில் 37 வருட ஆசிரியப்பணியினின்றும் ஓய்வு பெறுகின்ருர்.

திருநெல்வேலி சைவத்தமிழ் வித்தியாசாலையிலும் பரமேசுவரக் கல்லூரியிலும் தமது படிப்பைமுடித்துக் கொண்டு, கோப்பாய் ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் ஆசிரியபயிற்சி பெற்ருர். பின்னர் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தில் ஆசிரியப்பணியை ஆரம்பித்தார். பின்னர் தென்னிந்தியாவில் கோயமுத்தூர் ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் பயிற்சிக் கல்லூரியில் வார்தா திட்டத்தின்கீழ் ஒருவருட ஆசிரியப் பயிற்சி பெற்ருர். இலங்கைக்கு மீண்டும் திரும்பிவந்து கொக்குவில் இந்துக்கலூரியில் 21 வருடங்கள் பணிஆற்றினுர் மறைந்த அதிபர் திரு ஹன்டி பேரின்பநாயகத்தின் அன்புக்குப் பாத்திரமாய் விளங்கிய திரு. நமதுவாயம் தமது சிறமையான சேவையினுல் பலரது பாராட்டுக்கும் அன்புக்கும் உடையவராய் திகழ்ந்தார். பின்னர் மன்னுர் அர்ச் சேவியர் ஆண்கள் கல்லூரி, கொழும்பு இந்துக்கல்லூரி, கிளிநொச்சி புனிததெரேசா மகாவித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை ஆகியவற்றில் ஆசிரியப்பணியாற்றி இவர் எங்கெங்கு கடமையாற்றினுரோ, அந்தந்த அதிபர்களால் விரும்பி அழைக்கப்பட்டே பணியாற்றினுர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறுவயதிலேயே இசையில் ஏற்பட்ட ஆர்வம் இவரை ஒரு சிறந்த புல்லாங்குழல் வித்துவான் ஆக்கிவிட்டது. கோயமுத்தூர் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் பயிற்சிக்கல்லூரி இசைப்பேராசான் ஸ்ரீ சுபபிரமணியஐயர் அவர்களிடமும், யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான இசைவிற்பன்னர்களிடமும் முறையான பயிற்சிபெற்ருர். மறைந்த நாதஸ்வர வித்துவான் திரு. எஸ். பி. எம். திருநாவுக்கரசு இவரது வித்துவத்தன்மைக்கு மெருகேற்றி வைத்தார்.

கால் நூற்ருண்டுக்கு மேலாக இலங்கைவானெலியில் புல்லாங்குழல் கச்சேரி மட்டுமல்ல வேறுபல நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றிய பெருமை இவருக்குண்டு.

நாடகத்துறையிலும் இவரது திறமை பரிமளித்தது. வள்ளிமணுளன், இருவரங்கள் அலைகள் ஓய்வதில்லை போன்ற நாடகங்கள் இதற்கு சான்று பகரும் நாடகங்களுக்கு பிரதி எழுதியும், பாட்டு எழுதியும் இசை அமைத்தும் அவைசிறப்புறச் செய்துள்ளார். நாடகத் துறையில் ஒப்பனைக்கலையிலும் இவர் சிறந்துவிளங்கினுர். கவிதைகள் புனைவதிலும் இவர் வல்லவர்.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட அண்ணுமலை இசைத் தமிழ் மன்றத்தின் ஆரம்ப ஸ்தாபகர்களில் இவரும் ஒருவாரவர் அங்கு இன்றும் இவர் இசையாசிரியராக விளங்குகிருர். இளம் கலைஞர் மன்றத்திலும் திரு நமசிவாயம் புல்லாங்குழல் ஆசிரியராக கடமையாற்றுகின்ருர்.

ஆசிரியப் பணியினின்றும் திரு. நமசிவாயம் ஓய்வு பெற்ருலும் கலை உலகுக்கு இவரது முழுநேரச் சேவையும் கிடைக்கப் போகின்றது என அறிகின்ருேம் இசைப் பிரியர்களுக்கு இது ஒரு நல்ல செய்தியாகும்.

**து. வைத்திலிங்கம்.**

---

## மண்டைதீவில் மயிலிட்டி அகதிகள்!

(கொழும்புத்துறை)

மண்டைதீவில் பாதிப்புக்குள்ளாகும் பொதுமக்களின் நலனைக் கவனிக்கும் முகமாகப் பிரஜைகள் குழுவொன்று அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டுள்ளது.

குருநகர், மயிலிட்டிப்பகுதிகளிலிருந்து அகதிகளாக வந்து மண்டைதீவில் தஞ்சமடைந்துள்ள குடும்பங்களுக்கு உடனடி நிவாரண உதவிகளை வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்டது. இப்பிரஜைகள் குழுவின் தலைவராக மண்டைதீவுப் பங்குத் தந்தை வண. பிதா ஜே ஜோன்பிள்ளை கமிலஸ் நிமலனும், செயலாளராகத் திரு. என். இராமச்சந்திரனும் தெரியப்பட்டுள்ளனர்.

# "உள்ளதை உள்ளபடி கூறுகிறேன் யாருக்கும் ஏன் பயப்படவேண்டும்?"

## இந்தியா புறப்படுமுன் தொண்டமான் பேட்டி

(கொழும்பு)

''இலங்கையின் இனப் பிரச்னை உட்பட அரசியலின் சகல விடயங்களிலும் நான் உள்ளதை உள்ளபடியே கூறி வருகிறேன். உள்ளதை உள்ளவாறு கூறுவதற்கு நான் ஏன் யாருக்குப் பயப்பட வேண்டும்'' என்று கிராமியத் தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்தார்

நேற்று முன் தினம் அவர் இந்தியா பயணமாவதற்கு முன்பாக எமது நிருபர் அவரை அணுகி கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் பிரச்னைகள் தொடர்பாக நீங்கள் வெளியிடும் கருத்துக்கள் ஆணித்தரமானவையாகவும் துணிச்சல் மிக்கவையாகவும் உள்ளன. இதனால் தற்போது உங்களை பெரும் துணிச்சல் என்று பலரும் பேசிக்கொள்கிறார்கள் என்று குறுப்பிட்ட போது,

''நான் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிக்கவில்லை. இ. தொ. கா. வில்தான் இருக்கின்றேன். அதனால் நான் எமது பிரச்னைகளை எடுத்துக் கூறவேண்டிய நிலையில் உள்ளேன். எமது பிரச்னைகளையும். அவற்றின் உண்மைநிலைகளையும் எடுத்துக் கூறுவதில் நான் யாருக்கும் பயப்படத் தேவையில்லை'' என்று அவர் தெரிவித்தார்.

# கொழும்புப் பாடசாலை

## அதிபர்களுக்கு விசேட பணிப்புரை

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களை இன்று திங்கட்கிழமை முதல் தமது பாடசாலை வளவுக்குள்வரும் சகல வெளியார்களையும் கண்காணிக்குமாறு கல்வி அமைச்சு பணித்துள்ளது.

அரச எதிர்ப்பு நடவடிக்கையில் மாணவர்களைத் திரட்டுவதற்கு சில கோஷ்டியினர் முயற்சிகளை மேற்கொண்டுவருவதினால் கல்வி அமைச்சு மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளது.

பாடசாலைஅதிபர்கள் இன்று முதல் தமது பாடசாலை மாணவர்களைப் பற்றியும், அவர்களது நடமாட்டம் வெளியாருடன் அவர்களுக்கு உள்ள தொடர்பு என்பன பற்றியும் அவதானிக்குமாறும் இந்த பணிப்புரையில் கேட்கப்பட்டுள்ளது. (சு)

## மட்டக்களப்பில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விடுதலைமுன்னணியின் இந்த முகாம் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரிக்கு சென்றுகொண்டிருந்த பொலிசார் ஒருவரை கடத்துவதற்கு இந்த தீவிரவாதியும் இன்னுமொரு நபரும் முற்பட்ட வேளையில் இவர் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து இந்த தீவிரவாதியுடன் பொலிஸார் அந்த முகாமை அடைந்த பொழுது தீவிரவாதிகள் இயந்திரத்துப்பாக்கிகளாலும், கைத்துப்பாக்கிகளாலும் சுட்டதாகவும், இருதரப்பினருக்குமிடையிலான இந்த மோதலில் மூவர் கொல்லப்படதாகவும் ஏனையோர் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ரா]

## தீஅணைக்கும் யந்திரம்

(கொழும்பு)

யாழ். மாநகரசபையின் தீயணைக்கும் யந்திரத்தை யாழ் நகர் கொண்டு வருவதற்கான ஒழுங்குகளை யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானம் செய்து வருகிறார் இந்தத் தீயணைக்கும் படையைக் கொண்டு வருவதற்கான வீதி அனுமதிப் பத்திரம் பெறுவதிலும், பாதுகாப்பு ஒழுங்குகளைக் கவனிப்பதிலும் அவர் ஈடுபட்டுள்ளார் (க)

## அழுகிய நிலையில் சடலங்கள்?

(சென்னை)

அகதிகள் எனக்கருதப்படும் மூவரின் சடலங்கள் ராமேஸ்வரம் கடற்பகுதியில் கரை ஒதுங்கி கிடந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (ரா)

## வடமராட்சி எரிபொருள் விநியோகம்

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் எரிபொருள் விநியோகத்திற்கான அனுமதி புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கிடைத்துள்ளது இந்த அனுமதியை யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் வழங்கியுள்ளார்.

வடமராட்சிப் பகுதிக்கான எரிபொருள்விநியோக அனுபதி முன்னர் பருத்தித்துறை பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்திற்கே வழங்கப்பட்டிருந்தது. ஆனால் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையம் பாதுகாப்புப் பிரதேசத்திற்குள் அடங்கியிருப்பதால் பொதுமக்களுக்கு எரிபொருள்களை விநியோகிக்க முடியாமல் இருந்தது.

இதனைத்தொடர்ந்து பருத்தித்துறை பிரஜைகள் குழு, பருத்தித்துறை பாவனையாளர் சங்கம் ஆகியன வடமராட்சிப்பகுதி எரிபொருள் விநியோகத்திற்கான அனுமதியைப் புலோலி ப. நோ. கூ. சங்கத்திற்கு வழங்கவேண்டுமென யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் புலோலி ப. நோ. கூ. சங்கத்திற்கு இவ் அனுமதியை வழங்கினுர்.

# "எல்லாப் புதுக்கவிதைகளும் புரியமுடியாதவையல்ல"

(யாழ்ப்பாணம்)

''புதுக்கவிதை அகவுணர்வுகளை வெளிப்படுத்துகின்றது. ஆழமான கருத்துக்களைச் சுருங்கிய சொல்லில் வெளிப்படுத்தும் ஆற்றல் புதுக்கவிதைக்கு உண்டு. பாரதியின் வசன கவிதையிலிருந்து தோற்றம் பெற்ற புதுக்கவிதை இன்று மிகுந்த செவ்வாக்குப்பெற்றுத் திகழ்கிறது. எல்லாப் புதுக் கவிதைகளும் புரியமுடியாதவையல்ல''

மேற்கண்டவாறு கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றம் நடத்திய பேச்சுப் போட்டிக்குப் பிரதம நடுவராக கடமையாற்றிய பிரபல எழுத்தாளர் செம்பியன் செல்வன் குறிப்பிட்டார்.

விழாவில் தலைமையுரை நிகழ்த்திய கலாசாலை அதிபர் செல்வி ச. சின்னப்பு, பேச்சாற்றலும், கதை சொல்லும் ஆற்றலும், ஆசிரியர்களுக்கு எவ்வளவு முக்கியமானவை எனக் குறிப்பிட்டார்.

இரண்டாம்நாள் இடம் பெற்ற கதை சொல்லல்போட்டிகளுக்கு பிரபல எழுத்தாளர் யோ. பெனடிக்ட் பாலன் திருமதி பரமானந்தன் கவிஞன் க. கனகசிங்கம், திரு. சிவகுமார் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். தமிழ் மன்றக்காப்பாளர் முல்லைமணி இப்போட்டிகளை ஒழுங்குசெய்திருந்தார். மன்றத் தலைவர் திரு இ தேவராசா, செயலாளர் செல்வி ச. இராசேஸ்வரி ஆகியோர் நன்றியுரை கூறினர். கலாசாலைத் துணையதிபர் திருமதி பா. செல்லத்துரை வெற்றியீட்டியோருக்குசான்றிதழ்களை வழங்கினுர்.

## உலகசாதனை புரிந்த பசு மரணமானது!

[ஹாவானு]

கியூபாவில் நாளொன்றுக்கு 100 லீற்றர் பாலுக்குமேல் கொடுத்து 'கின்னர்' உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்ற பசு ஒன்று இறந்துவிட்டது.

இந்த அதிசயப் பசுவை கியூபா ஜனுதிபதி பிடல் காஸ்ரோ அடிக்கடி சென்று அது வளர்ந்த டண்ணையில் பார்வையிட்டு வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பசு இறந்ததினுல் கியூபாவின் ஜனுதிபதியும் மககளும் பெரும் கவலையும், துயரமும் கொண்டுள்ளனர். பசுவின் உடல் பதனிடப்பட்டு மியூஸியத்தில் வைக்கப்பட்டுள்ளது. (சு)

## சுருக்கெழுத்து பயிற்சி வகுப்பு

[புலோலி]

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன் புரிச்சங்கத்தின் இலவச தமிழ் ஆங்கில சுருக்கெழுத்துப்பயிற்சி வகுப்பொன்று அல்வாய் சின்னத்தம்பி வித்தியாசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஊழியர் நலன் புரிச்சங்க திட்ட அமைப்பாளர் திரு வ. சிவச்சந்திரதேவன் வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார். கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஆர். ஐயாத்துரையால் நடாத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில் இலவச தமிழ் சுருக்கெழுத்துப்பயிற்சியை மேற்கொள்வதற்கு 30 யுவதிகளும் இலவச ஆங்கில சுருக்கெழுத்து பயிற்சியை மேற்கொள்வதற்கு 40 யுவதிகளும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

## தொழில்நுட்ப மாணவர்களின் உருக்கமான வேண்டுகோள்

(கொழும்புத்துறை]

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் அண்மையில் நிகழ்ந்த கொள்ளையின்போது வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாத உபகரணங்களும் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன என்றும், அவற்றையாவது மீள ஒப்படைக்குமாறும் கொக்குவில் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இக்கொள்ளையின் போது அண்மையில் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட லேத் இயந்திரமீற்றரும், சாவிகளும் இனந்தெரியாத நபர்களினுல் கொண்டு செல்லப்பட்டுவிட்டதென்றும். இதனுல் அந்த லேத் இயந்திரத்தை இயக்கமுடியாத நிலையில் தொழிற்பயிற்சிமாணவர்களின் தொழிற்பயிற்சி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மார்ச்சம்பளத்துடன் உயர்வு

[கொழும்பு]

ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்புகள் மார்ச் மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படவுள்ளது.

மனோகரா மினி

இன்று தொடக்கம்
(2-3-85)

நாளை நமதே

றீகல் மினி

தினசரி 10-15, 1-30

விஜயகாந் - ரேவதி நடிக்கும்

வைதேகி காத்திருந்தாள்

றீகல்

தினசரி 10-30, 2-00

AN OFFICER AND A GENTLEMAN

கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

லிடோ சினிமா

தினசரி 10-30, 2-00

சிவாஜி, கே.ஆர்.விஜயா, நடித்த

கிரஹப்பிரவேசம்

வெலிங்டன்

(யாழ். நகர்)

10-15, 12-15, 2.30

சிவாஜி, கே. ஆர். விஜயா பிரபு நடித்த

நீதிபதி

(கலர்)

## கசிப்புக் குடிகாரருக்கு கசையடி!

[வண்ணார்பண்ணை]

கசிப்புக் குடிப்பதற்கு வரிசையில் நின்றவர்கள் பலர் கசையடி வாங்கிய சம்பவமொன்று நெடுங்குளம் வீதியில் நடைபெற்றது.

கொழும்புத்துறை - நெடுங்குளம் வீதிக்கு அருகாமையில் இருந்த கசிப்பு விற்கும் இடம் ஒன்றைத் திடீரென முற்றுகையிட்ட வாலிபர் கோஷ்டி ஒன்று அங்கு நின்றவர்களுக்குக் கசையடி கொடுத்து ஓடவைத்தது. இக் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவரை எச்சரிக்கைசெய்த இந்த வாலிபர்கள், வேறு பயனுள்ள தொழிலைச் செய்யுமாறும் ஆலோசனை தெரிவித்தனராம்.

# கட்டுநாயக்கா விமானநிலையத்தில் விசேட தகவல் பிரிவு!

[கொழும்பு]

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விசேட தகவல் பிரிவொன்று அமைக்கப்படவுள்ளது.

வெளிநாட்டிற்கு வேலை தேடிச்செல்லும், வெளிநாடுகளிலிருந்து தாய் நாட்டுக்குத் திரும்புவோர் ஆகியோர் பற்றிய முழுமையான தகவல்களை அறிவதே இந்தத் தகவல் பிரிவின் நோக்கமாகும்.

வெளிநாட்டுக்குச் செல்வோரும், அங்கிருந்து நாடு திரும்புவோரும் இந்தத் தகவல் நிலையத்துக்குத் தம்மைப்பற்றிய முழுமையான விபரத்தைத் தெரிவிக்கவேண்டும்

வெளிநாடுகளுக்குச் செல்வோர் அவரது கடவுச் சீட்டு, அவர்கள் செல்லும் விமான மார்க்கம், செல்லும் நாடு என்பன பற்றியும் அதேபோன்று அங்கிருந்து வருபவர்கள் தாம் சென்ற நாடு, அங்கு பார்த்த வேலை என்பனவற்றையும் தெரிவிக்கவேண்டும்.

## நெடுந்தீவில் விளையாட்டுப் போட்டிகள்

[கொழுப்புத்துறை]

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே விளையாட்டமைச்சின் ஆதரவுடன் சுற்றுப்போட்டிகளும், மெய்வல்லுநர் விளையாடடுப் போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன. விளையாட்டுத் துறை அதிகாரி திரு என். எஸ். முருகேசு இப்போட்டிகளுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுவருகின்றார்.

# இந்தியா, பாகிஸ்தான் மே.இ தீவுகள், நியூஸிலாந்து அரை இறுதி ஆட்டத்துக்குதெரிவாகின

(மெல்போர்ன்)

உலக கிரிக்கெட் சாம்பியன் போட்டியில் இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே நேற்று நடைபெற்ற போட்டியில் இந்தியா 8விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களை எடுத்தது. பிலிப்ஸ் 60 ஓட்டங்களை எடுத்தார்.

இந்தியா 36.1 ஓவர்களில் 2விக்கெட்டை இழந்து 164ஓட்டங்களை எடுத்தது. சிறிகாந் ஆட்டமிழக்காமல் 93 ஓட்டங்களை எடுத்தார். ரவிசாஸ்திரி 51 ஓட்டங்களை எடுத்தார். இந்த ஆட்டத்தின் மூலம் 'ஏ' பிரிவில் இந்தியாவும், பாகிஸ்தானும், 'பி'பிரிவில் மேற்கிந்திய தீவுகள், நியூஸிலாந்து அணிகளும், அரை இறுதி ஆட்டத்துக்கு தெரிவாகியுள்ளன.

அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா நியூஸிலாந்து அணியை எதிர்த்தும், மேற்கிந்தியத தீவுகள் பாகிஸ்தான் அணியை எதிர்த்தும் மோதவுள்ளன.

(6-ம் பக்கம் பார்க்க]

# சம்பள அதிகரிப்பு கிடைக்கவில்லையாம்!

## உதவிஆணையாளரிடம் புகார்

(பண்டத்தரிப்பு)

கடந்த 1983ம் ஆண்டுவரவு செலவுத்திட்டத்தில் அரசாங்கம் அறிவித்திருந்த 100 ரூபா சம்பள அதிகரிப்பும், அதற்குப்பிறகு அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வுகளும் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்க பணியாளர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை என்றும், இச்சம்பள அதிகரிப்புகளை தாமதமின்றி கிடைக்க ஆவன செய்யுமாறும் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் பண்டத்தரிப்பு கிளை யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் தலைவர் திரு. எஸ். லோகநாதன் தலைமையில் பண்டத்தரிப்பு கிளைத்தலைவர் திரு. நா. வ. சிவபாதம் செயலாளர் திரு. சி. மகேந்திரம், செயற்குழு உறுப்பினர் திரு மு. வேலாயுதபிள்ளை ஆகியோர் கடந்தவாரம் யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் ஜனுப் எம் இக்பாலை அவரது அலுவலகத்தில் சந்தித்து சம்பள அதிகரிப்பு தொடர்பாக பேச்சு வார்த்தை நடாத்திஞர்கள்.

கடந்த 1983-ல் அரசாங்கம் அறிவித்திருந்த 100 ரூபா சம்பள அதிகரிப்பு யாழ். மாவட்டத்திலுள்ள ப. நோ. கூ. சங்கங்கள் பலவற்றின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க பணியாளர்களுக்கு இது வரை வழங்கப்படவில்லை என்றும், இதனுல் அவர்கள் மிகுந்த சிரமங்களை அடைந்து வருவதாகவும் இப் பேச்சு வார்த்தையின் போது தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினுர்கள். இது தொடர்பாகக் கொழும்பிலுள்ள கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருடனும், கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவினருடனும் தொடர்புகொண்டு சம்பள அதிகரிப்பு விரைவில் கிடைக்க தாம் நடவடிக்கை மேற்கொள்ளுவதாக ஜனுப் இக்பால் உறுதியளித்தார்,

## இந்தியா

[5-ம்பக்கத் தொடர்ச்சி]

இந்தியா, நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான அரை இறுதி ஆட்டம் 5ம் திகதியும் மே. இ. தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கிடையானபோட்டி 6ம் திகதியும் இடம்பெறும்.

இறுதி ஆட்டத்துக்கு தெரிவாகும் அணிகளுக்கிடையான போட்டி 10ம் திகதி நடைபெறும். (சூ)

# இடமாற்றம் கிடைக்காத பட்டதாரி ஆசிரியர்கள்

## மீண்டும் விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

ஆசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமான இலங்கை ஆசிரியர் காங்கிரசின் கோரிக்கையை கல்விச்சேவைக் குழு ஏற்றுக்கொண்டுள்ளது என்று காங்கிரஸ் செயலாளர் திரு. க. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

தோட்டப்பாடசாலை உட்பட வெளி மாவட்டங்களில் பத்து வருடங்கள் சேவையாற்றியவர்களுக்கு இடமாற்றம் வழங்குதல், ஆறு வருடங்களுக்கு மேல் வெளி மாவட்டங்களில் கடமையாற்றியவர்களுக்கு மே முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் வழங்குதல் ஆகியவை சம்பந்தப்பட்ட கோரிக்கையே இவைகளாகும் என்று அவர் தெரிவித்தார்.

இதே வேளை அண்மையில் அமுல் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் இடமாற்றத்தின்போது, சேவை மூப்பின் அடிப்படையில் இடமாற்றம் கிடைக்காதவர்கள் கல்வித் திணைக்களத்திற்கு தமது விண்ணப்பத்தை அனுப்பி வைத்தால் அவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார் [ரா]

## விடுதலை செய்யப்பட்டார்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு தொலைத் தொடர்பு திணைக்களத்தில் கடமையாற்றிய மகேஸ்வரன் என்பவர் 3மாத பொலிஸ் விசாரணையின்பின் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையான இவர் வெளிநாட்டு தொலைபேசி அமைப்பு சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (சூ)

## குப்பைகளால் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் வீதிகளில் உள்ள குப்பைகள், கடந்த இருவாரங்களாக லொறிகளில் எடுத்துச் செல்லாததினுல் சிலவீதிகளில் குப்பைகள் தீயிட்டு எரிக்கப்பட்டு வருகின்றன.

இதனுல் குப்பைக்குள் உள்ள தகரங்கள், ஆணிகள், கண்ணுடித்துண்டுகள், உடைந்த பீங்கான்களால் பாதசாரிகளுக்குப் பெரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு வீதியிலும் தினமும் குப்பைக்குவியல்களின் உயரம் அதிகரிப்பதுடன் புதுப்புது இடங்களிலும் குப்பைகள் போடப்பட்டு வருகிறது. (க)

## கிளிநொச்சி வயோதிபர் யாழ். ஆஸ்பத்திரியில்

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சியில் ஏற்பட்ட பதற்ற நிலையின் போது காயமடைந்தவர்களில் ஒருவரான வேலுப்பிள்ளை கந்தையா [60 - வயது] நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட இவருக்கு உடன் சிகிச்சையளிக்கப்பட்டது. (க)

# ஆழ்ந்த நித்திரையிலிருந்த கணவனை தீ மூட்டி கொலை செய்தார் மனைவி!

(கொழும்புத்துறை)

ஆழ்ந்த நித்திரையிலிருந்த கணவனை உயிருடன் தீமூட்டிய மனைவி றிமாண்டில் வைக்கப்பட்டார், இக்கோரக் கொலைச் சம்பவம் நல்லூரில் நிகழ்ந்துள்ளது.

சின்னத்தம்பி செல்வராசா (வயது 22) என்னும் இளைஞரே தீக்கிரையானவராவார், இறந்தவர் நித்திரையாக இருந்தபோது அவரது மனைவி அவர்மீது மண்ணெண்ணையை ஊற்றித் தீமூட்டியதாகவும், தீ உடலில் பரவியதால் கணவன் அலறவே விரைந்து வந்த அயலவர்கள் அவரை எரிகாயங்களுடன் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும், பின்னர் அபாயகரமான நிலையில் யாழ். பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு பலியானதாகவும் மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இம்மரணத்தையடுத்து மரணவிசாரணையை மேற்கொண்ட யாழ். மேலதிக நீதவான் கே. எஸ். பி. வரதராசா இறந்தவரின் மனைவியான செல்வரசா யோகராணி (22 வயது) என்பவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். (கி)

## மரத்திலிருந்து தவறிவிழுந்து மரணம்

[யாழ்ப்பாணம்]

இலுப்பை மரத்தில் ஆட்டிற்குக் குழை பறிக்க ஏறியவர் தவறிவிழுந்து மரணமானுர்.

இறந்தவரான புத்தூரைச் சேர்ந்த கந்தையா சின்னையா (53 வயது) என்பவரின் மரண விசாரணையை யாழ். மரண விசாரணை அதிகாரி க. கேசவன் நடத்திஞர்.

மூளைசிதறி மரணம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## 2000 பயிற்சிபெற்ற...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் படையில் சேர்த்துக் கொள்ளவுள்ளார்கள் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு நிதியிலிருந்து பெருந்தொகையான ஆயுதங்கள் வாங்கவும் அரசு எண்ணியுள்ளது. (சூ)

## லொறி கடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் புகையிரத நிலையத்தில் சில தினங்களுக்கு முன் நடந்த சிலிப்பர் கட்டை கொள்ளையைத் தொடர்ந்து. அங்குமிஞ்சியிருந்த சுமார் 100 சிலிப்பர் கட்டைகள் லொறி மூலம் பாதுகாப்பான இடத்திற்குக்கொண்டுசெல்லப்பட்ட போது தற்போது அந்த லொறியும் கடத்தப்பட்டுள்ளதாக புகையிரதப் பகுதி வட்டாரம் தெரிவித்தது. [க]

## வீடுகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பகுதி சுற்றுலா விடுதிகளில் குடியமர்த்த வடஆற்காடு மாவட்ட அதிகாரிகள் ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே வந்தடைந்த 242 அங்கத்தவர்களைக் கொண்ட 53 குடும்பங்களை கோவில் கல்யாண மண்டபம் ஒன்றில் தங்கவைத்துள்ளதாகவும் 500 அங்கத்தவர்களைக் கொண்ட 100 குடும்பங்கள் இன்று வந்துசேரக்கூடும் என்றும் இவர்களுக்கு அரக்கோணத்திலும், குடியாத்தூரிலும் குடியமர்த்த வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு புடவைகள், மருந்து, உணவு வகைகள் ஆகியவற்றை வழங்க ஏற்பாடு செய்யுமாறு சகலபொது ஸ்தாபனங்களும் கேட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [ரா]

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை இராசரத்தினம்

(இளைப்பாறிய நில அளவையாளர்)

தெல்லிப்பழையைச் சேர்ந்த செல்லத்துரை இராசரத்தினம் காலமானுர். அன்னூர் திரு, திருமதி செல்லத்துரையின் மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், றஜியந்தன், கிஜியந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற தம்பையா, திருமதி தம்பையா (மெத்தை வீடு, பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை (4-3-85) காலை 9-00மணியளவில் தெல்லிப்பழையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். 2102

## மரண அறிவித்தல்

### திரு. அ. சிதம்பரப்பிள்ளை

திரு. அ. சிதம்பரப்பிள்ளை (உரிமையாளர், விஜிதா அரிசி ஆலை, அச்சுவேலி) 3-3 85ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், சுந்தரலிங்கம் (நீதிமன்றம், மல்லாகம்), பூபாலசிங்கம் (பாசீசா அன் கொம்பனி, கொழும்பு), சிவபாதலிங்கம், தனபாலசிங்கம் (விஜிதா அரிசி ஆலை), தவமணி, புஷ்பராணி, தேவராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஞானம் (பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்), நடராசா (ஆசிரியர், ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம், புத்தூர்), தேகேந்திரபோஸ் (விலைமதிப்பீட்டுத் திணைக்களம், கொழும்பு), செல்வராணி, நற்குணவதி, ஜெலஜா ஆகியோரின் மாமாவும், காலஞ்சென்ற முத்தையா, ஆசை ஆகியோரின் சகோதரரும் ஆவர்.

அன்னுரின் பூதவுடல் அச்சுவேலி வல்லை மயானத்தில் 04-03-85-ந் திகதி திங்கட்கிழமை நண்டகல் 1-00 மணிக்கு தகனக்கிரியைக்காக வல்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இங்ஙனம்

(2101) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

# இளம் பெண் தீ மூட்டித் தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

கணவன் கண்டித்ததால் இளம் மனைவி தீமூட்டித் தற்கொலை செய்து கொண்டார்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த பிரான்சிஸ் சேவியர் அன்ரன் யோகமலர் [18 வயது] என்பவரேதீக்கு பலியானவராவார்

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்திஞர்.

இறந்தவர் ஒன்றரை வருடத்தின்முன் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவரென்றும், சம்பவதினம் மாவிட்டபுரத்திலுள்ள கணவன் வீட்டிலிருந்து தாயார் வீட்டிற்குச் சென்றதாகவும் அங்கு கணவன் கண்டித்ததாகவும் இதனையடுத்து இறந்தவர் வீடு திரும்பி உடலெல்லாம் மண்ணெண்ணை ஊற்றி தீ மூட்டினுர் என்றும சாட்சியத்தில் தெரிவிககப்பட்டது.

விசாரணை முடிவில் தற்கொலை எனத்தீர்ப்பு அளிக்கப்பட்டது. (க

# யாழ். நகரில் மீண்டும் சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் சைக்கிள் திருட்டு மீண்டும் தலைதூக்கியுள்ளது.

நேற்று முன்தினம் வெளி நோயாளர் பகுதியில் ஒருவர் சயிக்கிளைப் பூட்டாமல் விட்டுவிட்டுக் கதைத்துக் கொண்டிருந்த போது, அவரது சைக்கில் திருடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அத்தியடியில் ஒருவர் நேற்று முன்தினம் காலை வீட்டுவாசலில் சைக்கிளைப் பூட்டாமல் விட்டுவிட்டு வீட்டுக்குள் சென்றதாகவும் திரும்பி வந்துபார்த்தபோது சைக்கிள் திருடப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ் தபால் கந்தோரிலும் சில தினங்களுக்குமுன் சைக்கிள் ஒன்று காணுமல் போய் விட்டதாம்.

சிலதினங்களுக்கு முன் வயலின் வித்துவான் ஒருவர் ஆனைப்பந்திச் சந்தியிலுள்ள தேநீர்க் கடைக்குமுன் சைக்கிளை நிறுத்திவிட்டுக் கடைக்குள் சென்று திரும்பி வந்து பார்த்தபோது சைக்கிள் திருட்டுப் போயிருந்தது. [க]

## பலாலி ராணுவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்க குருநகரிலிருந்து பிற்பகல் இரண்டு மணியளவில் புறப்பட்டிருந்தனர்.

மறுநாள் 27-ந் திகதி இவர்கள் கரை திரும்பவில்லை. இதனையடுத்து இவர்கள் குறித்து யாழ். அரசாங்க அதிபருடன் படகுச் சொந்தக்காரர் தொடர்பு கொண்டபோதே மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டது.

அம் மூன்று மீனவர்களும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை இப்பகுதியிலிருந்து இவர்களுடன் வேறு 3 படகுகளிலும சிலர் மீன் பிடிக்கச் சென்றிருந்தனர். ஆனுல் அவர்கள் பற்றிய விபரம் எதுவும் கிடைக்கவில்லை. (வி)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.